ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2090/21 - 2018 සැප්තැම්බර් මස 27 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.09.27

*2090/21 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16(2ஈ) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

*உத்தேச 140 அலகுகள் கொண்ட மாடி வீட்டுத் தொகுதி - இல. 14, கொழும்பு வீதி, காலி*

**சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை**

*1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக இராஜகிரிய, புத்கம இல. 100, பெயாவே ஹோல்டிங் தனியார் கம்பனியால் சமர்ப்பிக்கப்படும் காலி, கொழும்பு வீதி, இல. 145 எனும் இலக்க இடத்தில் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்திருக்கும் 140 அலகுகள் கொண்ட தொடர் மாடி வீட்டுத் திட்டத்துக்கு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொது மக்களின் பரிசீலனைக்காக கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் நாள் முழுவதும் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.15 மணி வரை 2018.09.27 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கும். (வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களைத் தவிர).*

இதற்கு மேலதிகமாக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.coastal.gov.lk இல் மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| (1) | மஹாவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு - | இல. 500, டி. பீ. ஜயா மாவத்தை, கொழும்பு 10 |
| (2) | கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம் - | புதிய செயலகம், 4 ஆவது மாடி, மாளிகாவத்தை, கொழும்பு 10 |
| (3) | மத்திய சுற்றாடல் அதிகார சபை - | இல. 104. "பரிசர பியச", டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை |
| (4) | நகர அபிவிருத்தி அதிகார சபை - | 6 மற்றும் 7 ஆம் மாடி, "செத்சிறிபாய", பத்தரமுல்லை |
| (5) | மாவட்டச் செயலகம் - | காலி |
| (6) | பிரதேச செயலகம் - | காலி |
| (7) | மாநகர சபை - | காலி |
| (8) | கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் - | மாவட்ட அலுவலகம், காலி |
| (9) | கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம், பிரதேச செயலகம், பில்லகொட, உணவட்டுண, காலி | |

1A - G 28593 — 27 (2018/09)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இந்த உத்தேச மாடி வீட்டு அபிவிருத்தித் திட்டத்தினால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பான அறிக்கை சம்பந்தமாக பொது மக்களின் கருத்துக்களை 2018.09.27 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்குமாறு அறியத்தருகிறேன்.

பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி,
பதில் பணிப்பாளர் நாயகம்,
கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம்,
4 ஆவது மாடி,
புதிய செயலகம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
தொலைபேசி இல. : 011-2449754, 011-2387922, 011-2449197.
தொலைநகல் இல. : 011-2438005, 011-2472623.

10-300

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.